

✠ அன்பே கடவுள் ✠

# ஒரு நிமிட சிலுவைப்பாதை

- மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

## தொடக்க செபம்

முதல்வர்: தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே, ஆமென்!

எல்லோரும்: இரக்கத்தின் ஊற்றே இறைவா, உம் திருமகன் இயேசுவின் பாடுகளையும் இறப்பையும் நாங்கள் நினைவுகூர்கின்றோம். அவர் நடந்து சென்ற சிலுவையின் பாதையில் அவரைப் பின்சென்று நடந்திட நாங்கள் வந்துள்ளோம். இறுதிவரை இயேசுவின் உண்மைச்சீடராக நாங்கள் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை இறைஞ்சி மன்றாடுகின்றோம். ஆமென்!

**சுருக்கமான மனத்துயர் செபம்:**

என் இறைவா! நன்மை நிறைந்தவர் நீர். அனைத்திற்கும் மேலாக அன்புக்கு உரியவர். என் பாவங்களால் உம்மை மனநோகச் செய்துவிட்டேன். ஆகவே நான் குற்றங்கள் பல செய்தேன் எனவும், நன்மைகள் பல செய்யத் தவறினேன் எனவும் மனம் நொந்து வருந்துகிறேன். உமது அருள் துணையால் நான் மனம் திரும்பி, இனிமேல் பாவம் செய்வதில்லை என்றும், பாவத்துக்கு ஏதுவான சூழ்நிலைகளை விட்டு விலகுவேன் என்றும் உறுதி கொடுக்கிறேன்.

*எங்கள் மீட்பராம் இயேசு கிறிஸ்துவின் பாடுகளின் பயனாக,*

*இறைவா, என்மேல் இரக்கமாயிரும்.*

திவ்விய இயேசுவே! எங்களுக்காகவும் உத்தரிப்புநிலை ஆன்மாக்களுக்காகவும் சிலுவைப் பாதையைத் தியானிப்பவர்களுக்கு அளிக்கப்படும் பலன்களை அடைய விரும்பி, உம் இரக்கத்தைக் கெஞ்சி மன்றாடுகிறோம்.

புனித மரியாவே! வியாகுல அன்னையே! இயேசுவின் பாடுகளின் போது அவரோடு நீர் உடனிருந்து, அவருடைய பாடுகளில் பங்கேற்றது போல, நாங்களும் எங்கள் அயலார் அனுபவிக்கும் துன்பங்களில் அவர்களுடன் இருந்து துணைபுரியும் ஆற்றலைப் பெற உம் திருமைந்தனிடம் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## சிலுவைப்பாதை நிலையின் தொடக்கத்தில்

இயேசு கிறிஸ்து பாடுபட்ட ----ஆம் நிலை

இயேசுவே! உமது திருச்சிலுவையை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

ஏனெனில் உமது திருச்சிலுவையால் நீர் எங்களை மீட்டருளினீர்.

## சிலுவைப்பாதை நிலையின் முடிவில்

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாகுக.

தொடக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே

எங்கள் மேல் இரக்கமாயிரும் - 2

இறந்த நம்பிக்கையாளர்கள் உமது இரக்கத்தினால் உம்மில் நிறைவாழ்வு பெறுவார்களாக! ஆமென்.

**முதல் நிலை**

செபத்தை உறுதியாகக் கொண்டு, யாரையும், எதற்கும், எப்பொழுதும் தீர்ப்பிடாமல் வாழ வரம் தாரும்.

**இரண்டாம் நிலை**

செபத்தின் பலனாக, மகிழ்ச்சியுடனே என் பாரத்தை சுமப்பதோடு, பிறரது பாரத்தையும் சுமக்க வரம் தாரும்.

**மூன்றாம் நிலை**

செபத்தின் உதவியினால், கற்புக்கு எதிரான போராட்டத்தில் வெற்றி பெற வரமருளும்.

**நான்காம் நிலை**

செபத்தின் நம்பிக்கையால், சந்திப்போருக்கு நம்பிக்கையை விதைத்திட வரமருளும்.

**ஐந்தாம் நிலை**

செபத்தின் பலனால், பிறருக்கு எப்பொழுதும், எதிலும் உதவி செய்ய வரமருளும்.

**ஆறாம் நிலை**

செபத்தின் ஆற்றலால், பிறருக்கு ஆறுதல் அளித்திட வரமருளும்.

**ஏழாம் நிலை**

செபத்தை முன்னிறுத்தி, எளிமையான வாழ்வு வாழ்ந்திட வரமருளும்.

**எட்டாம் நிலை**

செபத்தை அர்த்தமுள்ளதாக்கிட, அழுவோரின் கண்ணீரைத் துடைக்க வரமருளும்.

**ஒன்பதாம் நிலை**

செப வாழ்வு அருளும் ஆற்றலால், கீழ்ப்படிந்து வாழ்ந்திட வரமருளும்.

**பத்தாம் நிலை**

செப வாழ்வு கற்றுத் தரும், ஒழுக்கநெறி வாழ்வு வாழ வரமருளும்.

**பதினொன்றாம் நிலை**

செபமே ஜெயம் என்பதை உணர்ந்து வாழ, முழுவதுமாக அர்ப்பணிக்க வரமருளும்.

**பன்னிரண்டாம் நிலை**

செபம் போதிக்கும் உண்மையை உணர்ந்து, வாழ்ந்தாலும், இறந்தாலும் ஆதாயமே என்பதை உணர வரமருளும்.

**பதிமூன்றாம் நிலை**

செபிக்க கற்றுத் தந்த, தாயைப் போல, உணர்ந்து செபிக்க வரம் தாரும்.

**பதினான்காம் நிலை**

செபம் கேட்கப்பட, அறைக்குள் சென்று தாழிட்டு, அடக்கமாக, அமைதியாக, செபிக்க வரம் தாரும்.

## சிலுவைப்பாதை முடிவில்

பொறுத்தருளும் கர்த்தாவே!

உமது ஜனத்தின் பாவங்களைப் பொறுத்தருளும்.

என்றென்றைக்கும் எங்கள்மேல் கோபமாயிராதேயும் சுவாமி.

தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.



## திருத்தந்தையின் கருத்துக்களுக்காக...

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக!

எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும். தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.

அருள் நிறைந்த மரியே வாழ்க! / ஆண்டவர் உம்முடனே. / பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே. / உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் / ஆசி பெற்றவரே./

புனித மரியே / இறைவனின் தாயே / பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக / இப்பொழுதும் / எங்கள் இறப்பின் வேளையிலும் / வேண்டிக்கொள்ளும். / ஆமென்.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சிமை உண்டாகுக.

தொடக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே, ஆமென்!